ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2483/12 - 2026 අප්‍රේල් මස 09 වැනි බ්‍රහස්පතින්දා - 2026.04.09

*2483/12 ஆம் இலக்கம் - 2026 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 09 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV(அ) - மாகாண சபைகள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

### கிழக்கு மாகாண மாகாண சபை

### ஆளுநர் விஞ்ஞாபனம் 2026/01 இற்கான திருத்தம்

1990 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, மாகாண சபைகள் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க, மாகாண சபைகள் சட்டத்தின் 32(2) ஆம் பிரிவின் கீழான கிழக்கு மாகாண அரசாங்க சேவைக்கான தத்துவங்களை கையளித்தல் தொடர்பான கட்டளை

கிழக்கு மாகாணத்தின் ஆளுநர் ஜயந்த லால் ரத்னசேகர ஆகிய நான், 1990 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க மாகாண சபைகள் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் சட்டத்தின் 32(1) ஆம் உபபிரிவின் கீழ் எனக்கு வழங்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம் மேற்குறிப்பிடப்பட்ட தலைப்பின் கீழ் என்னால் 2468/10ஆம் இலக்க 2025.12.23. ஆந் திகதிய அதிவிஷேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் பிரசுரிக்கப்பட்ட கட்டளையின் அட்டவணை 2 இல் பந்தி (4) (A) 1 இன் கீழ் கையளிக்கப்பட்ட தத்துவங்கள், 2026 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆம் திகதி முதல் செயற்படும்வண்ணம் திருத்தம் மேற்கொள்ளப்பட்டு இத்தால் கட்டளையாக்கப்படுகின்றது.

(1) அட்டவணை 2, பந்தி (4) (A)1 "இலங்கை கல்வி நிர்வாக சேவை தொடர்பில் ஒழுக்காற்று கட்டுப்பாடு பிரதம செயலாளரால் நடைமுறைப்படுத்தப்பட முடியும்" என்ற புதிய சொற்றொடரை உட்புகுத்துவதன் மூலம் திருத்தம் செய்யப்பட்டு கீழ்வருமாறு பதிலீடு செய்யப்படுகின்றது.

"இணைப்பு I இன் பந்தி 01 இன் கீழ் 1989.11.15 ஆம் திகதி வெளியிடப்பட்ட பொது நிர்வாக சுற்றறிக்கை இல 56/89 மற்றும் அதனுடன் தொடர்புடைய திருத்தங்கள் 1993.04.23 ஆம் திகதிய 56/89(i) ஆம் இலக்க சுற்றறிக்கை மற்றும் 1995.11.21 ஆம் திகதிய 56/89(ii) ஆம் இலக்க சுற்றறிக்கை ஆகியவற்றின் பிரகாரம் மாகாணப் பொதுச் சேவைக்காக விடுவிக்கப்பட்டுள்ள அல்லது இடைக்கால பணியிடமாற்ற அடிப்படையில் (Secondment), இணைக்கப்பட்டுள்ள நாடளாவிய சேவை அதிகாரிகளின் இடமமர்த்தல், இடமாற்றம் மற்றும் ஆரம்பகட்ட விசாரணைகள் தொடர்பான தத்துவங்கள் (இலங்கை கல்வி நிர்வாக சேவை தொடர்பில் ஒழுக்காற்று கட்டுப்பாடு பிரதம செயலாளரால் நடைமுறைப்படுத்தப்பட முடியும்) பொதுச் சேவை ஆணைக்குழுவின் தாபன நடைமுறை ஒழுங்கு விதிகள் மற்றும் பொதுச் சேவை ஆணைக்குழுவால்



*இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

அனுமதிக்கப்பட்ட இடமாற்றக் கொள்கை விதிகளுக்கு அமைய செயற்படுத்தப்பட முடியும். ஆயினும், இதனோடு இணைக்கப்பட்டுள்ள இணைப்பு I இன் பந்தி 01 இன் (i), (ii) (vi) மற்றும் (vii) இல் குறிப்பிடப்பட்டுள்ள நாடளாவிய சேவை அதிகாரிகளின் இடமமர்த்தல் மற்றும் இடமாற்றம் உரிய அமைச்சின் செயலாளர் மற்றும் /அல்லது பிரதிப் பிரதம செயலாளரின் ஆலோசனைக்கு அமைய எனது ஒப்புதலுக்கு இணங்கச் செயற்படுத்தப்படல் வேண்டும்".

EOG 04 - 0053